# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர் , கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 5083/ 2011 / எம்சி. 8 நாள் : 07.07.2011

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 11.07.2011 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/உண்மை நகல் /

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - ஜுலை 2011

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ. எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | நகரமைப்புப் பிரிவு - கோயம்புத்துார் மாநகராட்சி- எல்லை விரிவாக்கம் செய்தல் - உள்ளாட்சி அமைப்புகளை இணைத்தல் - கருத்துக்கள் பதிவு செய்தல் - தொடர்பாக. |

**நன்றியுரை**

அ) **திருக்குறள்**

**பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்**
**கிறையொருங்கு நேர்வது நாடு.**

(குறள் 733)

**விளக்கம்**

புதிய சுமைகள் ஒன்றுதிரண்டு வரும்போதும் அவற்றைத் தாங்கிக் கொண்டு, அரசுக்குரிய வரி வகைகளைச் செலுத்துமளவுக்கு வளம் படைத்ததே சிறந்த நாடாகும்.

திருவள்ளுவர்

---

ஆ) **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## பொருள் 1

1. கோயம்புத்தூர் மாமன்றத் தீர்மான எண் : 31, நாள்-06.05.2010-இல், 32 உள்ளாட்சிகளை கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்க தீர்மானிக்கப்பட்டவாறு 19.05.2010-ஆம் நாளைய இவ்வலுவலக கடிதம் மூலம் அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டது.

2. மக்கள் தொகை, பரப்பளவு, வருமானம், தனிநபர் வருமானம், பரப்பளவு அடிப்படையிலான வருமானம், உட்கட்டமைப்பு வசதிகள், மேலாண்மை செய்ய இயலுகின்ற நிலப்பரப்பு, நகரமயமாதல் விதி ஆகியவைகளின் அடிப்படையில் நன்கு ஆராய்ந்தும், அரசு மட்டத்தில் பல்வேறு ஆலோசனைக் கூட்டங்களில் கலந்தாலோசித்த பின்னரும், அரசாணை எண்: 251, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(தேர்தல்) துறை, நாள்:20.10.2010-ன்படி, 12 உள்ளாட்சி அமைப்புகளை கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்க அரசு ஆணையிட்டது.

3. மேலும் அரசாணை எண்- 40, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(தேர்தல்) துறை, நாள்:08.02.2011-இன்படி, வெள்ளக்கிணர் மற்றும் சின்னவேடம்பட்டி ஆகிய இரு பேரூராட்சிகளையும் கூடுதலாக கோவை மாநகராட்சியுடன் இணைக்க அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்விரு அரசாணைகளின் விபரங்களை 20.10.2010 மற்றும் 08.02.2011-ஆம் நாளன்று தமிழ்நாடு அரசு இதழ்களில் பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து ஆட்சேபனைக் கருத்துகள் தெரிவிப்பதற்கு ஆறு வார காலம் அவகாசம் வழங்கி அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டது.

4. அரசாணை எண் 49, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(தேர்தல்) துறை, நாள் 22.02.2011 மற்றும் அரசாணை எண் 72, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(தேர்தல்) துறை, நாள் 12.05.2011-இன்படி 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 3ஆம் பிரிவின் 6 ஆம் உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை கொண்டு தமிழ்நாடு அரசு கீழ்காணும் அட்டவணையில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளை கோவை மாநகராட்சியுடன் இணைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன் விபரங்கள் 22.02.2011 மற்றும் 12.05.2011ஆம் நாளன்று தமிழ்நாடு அரசு இதழ்களில் அரசால் வெளியிடப்பட்டது.

**அட்டவணை**

| **வ.எண்.** | **உள்ளாட்சி அமைப்புகளின் பெயர்** | **உள்ளாட்சியின் பரப்பிடம் முழுமையாக அல்லது பகுதியாக இணைக்கப்பட்டதா.** |
|---|---|---|
| 1 | குறிச்சி நகராட்சி | முழுமையாக |
| 2 | குனியமுத்தூர் நகராட்சி | முழுமையாக |
| 3 | கவுண்டம்பாளையம் நகராட்சி | முழுமையாக |
| 4 | துடியலூர் பேரூராட்சி | முழுமையாக |
| 5 | வெள்ளக்கிணர் பேரூராட்சி | முழுமையாக |
| 6 | சின்னவேடம்பட்டி பேரூராட்சி | முழுமையாக |
| 7 | சரவணம்பட்டி பேரூராட்சி | முழுமையாக |
| 8 | காளப்பட்டி பேரூராட்சி | முழுமையாக |
| 9 | வடவள்ளி பேரூராட்சி | முழுமையாக |
| 10 | வீரகேரளம் பேரூராட்சி | முழுமையாக |
| 11 | விளாங்குறிச்சி கிராம ஊராட்சி | முழுமையாக |

5. 2001 ஆம் வருட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள கோயம்புத்தூர் மாநகராட்சியின் மக்கள் தொகை 12.51 இலட்சங்கள்; பரப்பளவு 257.04 ச.கி.மீ; வருமானம் ரூ. 27,972.18 இலட்சங்கள் ஆகும்.

6. கோயம்புத்தூர் மாநகரட்சி சட்டம் 1981 பிரிவு- 5, உட்பிரிவு-1, பிரிவு -51, உட்பிரிவு-1 மற்றும் 52AA பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வார்டுகளின் எண்ணிக்கையில் தமிழ்நாடு அவசர சட்டம் 8/2011 மூலமாக 72 வார்டுகள் 100 வார்டுகளாக மாற்றி அமைத்து சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது.

7. மக்கள் தொகை, பரப்பளவு, மற்றும் வருமானம் அடிப்படையில் நகரமயமாதல் விதிகளின்படி உள்ளாட்சிகளை, வேகமாக நகரமயமாகும் பகுதிகள், மிதமாக நகரமயமாகும் பகுதிகள், கோவை மாநகரை ஒட்டியுள்ள பகுதிகள் என தரம்பிரித்து, அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட உள்ளாட்சிகளின் சராசரி மக்கள் தொகையை கணக்கிட்டு, மக்கள்தொகை, பரப்பளவு மற்றும் வருமானம் அடிப்படையில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 60 வார்டுகள் எனவும், கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 11 உள்ளாட்சிகளுக்கு 40 வார்டுகள் எனவும் நிர்ணயம் செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் வார்டுகள் பிரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தற்போது உள்ள கோயம்புத்தூர் மாநகராட்சியின் 72 வார்டுகள் 60 ஆகவும், கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சிகளின் மொத்த வார்டுகளான-175ஐ, 40 ஆகவும் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

8. அரசாணை எண் 91, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை; நாள் 28.06.2011-இன்படியும், நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல் முறைகள் ந.க.எண் :25120/2011-எம்3, நாள் 01.07.2011-இன்படியும் திரு.துரை.சந்திரசேகரன், கூடுதல் இயக்குநர், நகராட்சிகளின் நிர்வாக ஆணையரகம், சென்னை-5 அவர்கள் கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப் பணி அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

9. விரிவாக்கப்படும் கோயம்புத்தூர் மாநகராட்சியின் உத்தேச வார்டுகள் எல்லை குறித்த விபரங்களை மாமன்றத்தில் வைத்து, மாமன்றத்தின் கருத்தைப் பெற்று 13.07.2011-க்குள் மறுசீரமைப்பிற்காக சிறப்புப் பணி அலுவலர் அவர்களுக்கு அனுப்பவேண்டும் எனவும்; அவ்வாறு பெறப்படும் கருத்துகள் மீது அரசு உரிய ஆணை பிறப்பிக்கும் எனவும், குறிப்பிட்ட காலவரையரைக்குள் கருத்துகள் ஏதும் பெறப்படவில்லை எனில் கருத்துகள் ஏதுமில்லையெனக் கருதி மேல்நடவடிக்கை தொடரப்படும் எனவும் கூடுதல் இயக்குநர் மற்றும் சிறப்பு பணி அலுவலர் (கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு), நகராட்சிகளின் நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் ந.க.எண் சிறப்பு 1/2011. கூ.இ.(ச), நாள் 04.07.2011-ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளில் குறிப்பிட்ட அரசாணைகள், தமிழ்நாடு அரசு அறிவிக்கைகள், சட்டத்திருத்த நகல், உத்தேச வார்டுகள் எல்லை குறித்த விபரப்பட்டியல் நகல்களின் நகல்கள் இணைக்கப்பட்டுள்ளது. எனவே விரிவாக்கப்படும் கோயம்புத்தூர் மாநகராட்சியின் உத்தேச வார்டுகளின் எல்லைகள் குறித்த விபரங்களை மாமன்றம் பார்வையிட்டு கருத்தை தெரிவிக்க கோரும், இப்பொருள் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மாமன்றம் கருத்துக்களை பதிவு செய்யலாம்

ந.க.எண் :1533/2007/எம்.எச்.5

## மாநகர மன்ற தீர்மானம் எண் 20 நாள் 11.07.2011

1. விரிவாக்கப்படும் கோயம்புத்தூர் மாநகராட்சியின் உத்தேச வார்டுகளின் எல்லைகளுக்கு ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

2. பேரூர், சின்னியம்பாளையம், இருகூர், வெள்ளலூர் ஆகிய உள்ளாட்சிகளையும் கோவை மாநகராட்சியுடன் இணைக்க மாமன்ற அனைத்துக் கட்சி உறுப்பினர்களால் கோரப்பட்டது. சாத்தியக்கூறுகள் இருப்பின் அரசு பரிசீலனை செய்து, பேரூர், சின்னியம்பாளையம், இருகூர், வெள்ளலூர் ஆகிய உள்ளாட்சிகளை மாநகராட்சியுடன் இணைக்கக் கோருவதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

3. கோவை மாநகராட்சியின் பழைய வார்டு எண் 72-ல் உள்ள மக்கள் தொகை பிற வார்டுகளைவிட மிகவும் கூடுதலாக உள்ளதால் வார்டு எண் 72-ஐ இரண்டாக பிரிக்க வேண்டும் என அனைத்துக் கட்சி மாமன்ற உறுப்பினர்களாலும் கோரப்பட்டது. அரசின் பரிசீலனைக்கு இக்கோரிக்கையினை அனுப்பலாம் என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

4. தற்போது உள்ள 4 மண்டலங்களுடன் மேலும் 4 மண்டலங்களை சேர்த்து 8 மண்டலங்களாக நிர்ணயம் செய்யவும், அனைத்துநிலை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை தேவையான அளவிற்கு நியமனம் செய்து தருமாறு அரசைக் கோரவும் தீர்மானிக்கப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் 1**

பொருள் - தினக்கூலி அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளர்களாக பணிபுரிந்துவரும் 11 நபர்களுக்கு பணி வரன்முறைப்படுத்த உத்தரவு வழங்க தீர்மானம் நிறைவேற்றக் கோருதல்

------------------

கோவை மாநகராட்சி பொறியியல் பிரிவு அலுவலகங்களில் 01.10.1996க்குப் பிறகு நாளது தேதிவரை 10 ஆண்டுகளுக்கு மேலாக தினக்கூலி அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளர்களாக கீழ்க்கண்ட நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

| வ.எண் | பெயர் | வயது | இனம் | கல்வித் தகுதி |
|---|---|---|---|---|
| 1 | பி. ஜோதி விநாயகம் | 48 | BC | B.E. |
| 2 | வி.ஜெகதீஸ்வரி | 35 | MBC | D.C.E |
| 3 | சி.டி. சீனிவாசன் | 34 | BC | D.C.E. |
| 4 | எம். சக்திவேல் | 37 | BC | D.E.E.E |
| 5 | கே. சரவணக்குமார் | 31 | BC | D.C.E |
| 6 | கே. கணேசன் | 31 | SC | D.C.R.E |
| 7 | ஆர்.வெங்கடேஷ் | 36 | SC | D.C.E |
| 8 | பி. அனிதா | 42 | BC | D.C.E |
| 9 | ஜே.மார்ட்டின் மரிய அந்தோணி | 32 | BC | D.C.E |
| 10 | ஜி. கமலக்கண்ணன் | 29 | BC | M.E |
| 11 | எஸ். மோகன்குமார் | 30 | BC | D.C.E |

01.10.1996க்கு முன்பு தினக்கூலி அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளர்களாக பொறியியல் பிரிவுகளில் பணிபுரிந்து வந்த 12 நபர்களை நியமனக்குழு மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதத்திற்கிணங்க அரசாணை எண். 21 நாள் 23.02.06ல் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்படாமைக்கு விதித்தளர்வும், வயது வரம்பு விதித்தளர்வும், இனச்சுழற்சி முறையை பின்பற்றாமைக்கு விதித் தளர்வும் அளித்து இம்மாநகராட்சியில் பணி வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதத்திற்கிணங்க 1.10.96க்குப் பிறகு தினக்கூலி அடிப்படையில் தொழிலநுட்ப உதவியாளர்களாக பணிபுரிந்து வந்த

1) மூன்றாம் நிலை பேரூராட்சிகள் துறையில் அரசாணை எண் 73 நாள் 25.05.09 ல் 25 பேரும்

2) பேரூராட்சிகள் துறையில் அரசாணை எண். 183 நாள் 19.09.08ல் 190 பேரும்

3) பேரூராட்சிகள் துறையில் அரசாணை எண் 242 நாள் 10.12.09 ல் 194 பேரும்

வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்படாமைக்கு விதித் தளர்வும், வயது வரம்பு விதித் தளர்வும் அளிக்கப்பட்டு, அரசால் பணி வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளனர்.

எனவே மேற்படி பணியாளர்கள் நீண்ட காலமாக இம்மாநகராட்சி பொறியியல் பிரிவுகளில் பணிபுரிந்து வருவதையும், மாநகராட்சி எல்லை விரிவுபடுத்தப்படவுள்ள நிலையில், தற்போது பொறியியல் பிரிவுகளில் உள்ள காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதையும், ஏற்கனவே இம்மாநகராட்சி மற்றும் பல பேரூராட்சிகளில் பணி வரன்முறைப்படுத்தப்பட்டதை முன் உதாரணமாகக் கொண்டும், நீண்ட காலமாக இவர்களின் கோரிக்கை தீர்க்கப்படாமல் இருப்பதையும் கருத்தில் கொண்டும், மனிதாபிமான அடிப்படையிலும், அவர்களின் கோரிக்கையினை பரிசீலனை செய்து சிறப்புத் தேர்வாக அவர்களின் பணியினை வரன்முறைப்படுத்தலாம் என இம்மாமன்றம் கருதுகிறது.

மேலும் மாமன்றம் தீர்மான எண் 19 நாள் 28.05.08ல் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானத்தில் மேற்குறிப்பிட்டுள்ள 11 நபர்களையும் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நியமனம் செய்யப்படாமைக்கு விதித் தளர்வும், வயது வரம்பு விதித் தளர்வும், இனசுழற்சி முறைக்கு விதித் தளர்வும் செய்யவும் குறிப்பிடப்பட்டு பரிந்துரை செய்யப்படவில்லை.

எனவே மேற்படி 11 நபர்களும் தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு மேலாக இம்மாநகராட்சியில் பணிபுரிந்து வருவதாலும், மாநகராட்சி பொறியியல் பிரிவு பணிகள் குறித்து அனுபவம் பெற்றிருப்பதாலும், மேற்கண்ட 11 நபர்களுக்கு வயது வரம்பு விதித் தளர்வும், வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நியமனம் செய்யப்படாமைக்கு விதித் தளர்வும், இனசுழற்சி முறைக்கு விதித் தளர்வும் செய்து பணி நியமனம் செய்ய அரசுக்கு பரிந்துரைக்க வேண்டி அனைத்து கட்சி மாமன்றக்குழு சார்பில் தீர்மானம் நிறைவேற்ற கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 11.07.2011

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத் தீர்மானம் 2**

கோயம்புத்துார் மாநகராட்சி மாமன்ற கூட்ட அரங்கினுள் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் படத்தை வைக்கவேண்டும் என்று சிறப்புத் தீர்மானத்தை முன்மொழிகிறோம். இத்தீர்மானத்தை நிறைவேற்றவேண்டுமாய் மாநகராட்சி மாமன்ற திராவிட முன்னேற்றக் கழக மாமன்ற உறுப்பினர்களின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

சிறப்புத் தீர்மானம் எண் 2 நாள் 11.07.2011

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்துார் மாநகராட்சி